செ.வெ.எண்.22 நாள்: 07.09.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் வியாழக்கிழமை தோறும் அரசு அலுவலகங்களில் டெங்கு மற்றும் கூட்டுத்துப்புரவுப்பணி முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களில் வியாழக்கிழமை தோறும் டெங்கு தடுப்பு மற்றும் கூட்டு துப்புரவுப் பணி முகாம் தொடக்க நிகழ்ச்சி இன்று (07.09.2017) நடைபெற்றது.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு வியாழக்கிழமை தோறும் அரசு அலுவலங்களில் கூட்டு துப்புரவுப் பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களில் டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில், ஒவ்வொரு வியாழக்கிழமை தோறும் அலுவலக வளாகத்தில் உள்ள குடிநீர் தொட்டிகள் அனைத்தும் ஏ.டி.எஸ். கொசுப்புழு வளரா வண்ணம் மூடி வைக்கப்பட்டுள்ளதா என்பதையும், டயர், தேங்காய் ஓடுகள், பிளாஸ்டிக் டம்ளர், பேப்பர் கப்புகள், சிமெண்ட் தொட்டிகள், பாலிதீன் பைகள் மற்றும் உணவு டப்பாக்கள் போன்ற வீணான பொருட்கள் எதுவும் அலுவலக வளாகத்தில் இல்லை என்று அந்தந்த அலுவலகத்தில் உள்ள தலைமை அலுவலர்கள் நேரில் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும். மேலும், அலுவலக வளாகப் பகுதிகளில் குப்பைகள் தேங்கா வண்ணம் தூய்மையாக பராமரிக்கப்படுகின்றதா? என்பதையும் ஆய்வு செய்து சான்றிதழ்களை வாரந்தோறும் ஒவ்வொரு வியாழக்கிழமை அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், அரசு அலுவலர்கள் தாங்கள் பணிபுரியும் இடங்களை சுத்தமாக, சுகாதாரமான முறையில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலும், தூய்மையை பராமரிக்க வேண்டும். டெங்கு விழிப்புணர்வு பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம்பகவத், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராமசுப்பிரமணியன், கோட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன், மாநகர் நகர் அலுவலர் மரு.பொற்செல்வன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.செந்தில்குமார், மாவட்ட சுகாதாரக் கல்வி அலுவலர் திரு.அப்துல் காதர், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் திரு.சாமுவேல் செல்வராஜ், சுகாதார ஆய்வாளர் திரு.முருகன் உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு** : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி